# DEPOSITION OF WITNESS

***IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, TIRUNELVELI.***

**O.S. No. 138 / 2018**

| | |
|---|---|
| வாசா. | :: **1.** |
| பெயர் | :: செந்தில்முத்துக்குமார். |
| தந்தை பெயர் | :: வேலாயுதம். |
| கிராமம் | :: பாளையங்கோட்டை. |
| தாலுகா | :: திருநெல்வேலி. |
| சாதி | :: அருந்ததியர். |
| மதம் | :: இந்து. |
| தொழில் | :: சிறுதொழில். |
| வயது | :: **34.** |

Solemnly affirmed by Grade I Bench Clerk Thiru.T.Thirumalai Kumaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 17th day of JULY 2019**.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கின் வாதி. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **06.10.1982** ல் என்னுடைய தந்தை வேலாயுதம் வழக்குரை தபசில் சொத்தை கிரையம் பெற்றதற்கான அசல் கிரைய ஆவணம் வா.சா.ஆ.**1.** **28.03.1988** ல் என்னுடைய தந்தை அவர் பெயருக்கு எழுதி வாங்கிய சீர்திருத்த பத்திரம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.**2.** **31.12.2014** தேதிய என்னுடைய தந்தையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.**3. 03.02.2015** தேதியில் பாளையங்கோட்டை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட என் தந்தையின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.**4.**

**04.07.2018** ல் எனது தாயார் தங்கம்மாள், என் சகோதரர் சிவகுமார், எனது சகோதரி மாலதி எனக்கு எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை ஆவணம் வா.சா.ஆ.**5.** (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) **21.02.2018** ல் எனது தந்தை பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.**6.** **17.08.2018** ல் நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ.**7.** **31.08.2018** ல் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு அசல் வா.சா.ஆ.**8.** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

**நாள்: 26.07.2019.**

**O.S.No. 138 / 2018**

**P.W.1.** செந்தில் முத்துக்குமார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) :**

நான் சென்னையில் சுயமாக தொழில் செய்து வருகிறேன். நான் சென்னை அண்ணா நகர், கிழக்கு, குஜ்ஜி 2வது குறுக்கு தெருவில், 2வது மாடியில் இருப்பதாக சொன்னால் முன்பு குடியிருந்தேன். இப்போது எண்.37, 10வது பிளாக், ஜீவன் பீமா நகர், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101 என்ற விலாசத்தில் இருக்கிறேன். நான் 2011-ஆம் வருடத்திலிருந்து சென்னையில் தான் இருக்கிறேன். நான் சாட்சி சொல்வதற்காக சென்னையிலிருந்து வந்துள்ளேன். தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் கீழே உள்ள பகுதியில் எனது அண்ணன் சிவகுமாரும், எனது தாயாரும் குடியிருக்கிறார்கள். மேலே உள்ள பகுதியில் பிரதிவாதி குடியிருக்கிறார் என்றால் அப்பா இறந்த பின்பு நாங்கள்தான் அவரை குடிவைத்தோம். அவ்வாறு அப்பா இறந்த பின்பு குடிவைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்என்றால் சரியல்ல. பிரதிவாதி என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே அவர் சொல்லிதான் மாடியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் சென்னையில் தனியாக புராஜக்ட் வேலை செய்து வருகிறேன். அதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் ஜிஎஸ்டி பதிவு செய்துள்ளேன். அதன் எண் தெரியுமா என்றால் மொபைலில் உள்ளது. அனுமதி கொடுத்தால் பார்த்து சொல்கிறேன். எனக்கும், என் மனைவிக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. என் மனைவி பாளையங்கோட்டை, டார்லிங் நகரில் குடியிருக்கிறார் என்றால் எனக்குத்தெரியாது. என் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் தாவா சொத்தில் கீழ் பகுதியில் குடியிருப்பது பொய் என்று சொன்னால் அவ்வப்போது வந்து தங்கி செல்வேன். அங்கு குடியிருக்கவில்லை. என் அப்பா கிரையம் வாங்கிய வாசாஆ. 1 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அதன்கீழ் காலிமனை கிரையம் வாங்கினாரா, வீடு வாங்கினாரா என்று

ஞாபகமில்லை. இப்போது இடம் வாங்கி, அவர் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்ததால் கனரா வங்கியிலிருந்து கடன் வாங்கி வீடு கட்டினார். எனவே வீடும், மனையும் கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியிருப்பது தவறு என்றால் எனக்குத்தெரியவில்லை. ஆரம்பத்தில் கீழ்பகுதி மட்டும் ஒரு ஹால், ஒரு சமையலறை கட்டப்பட்டது என்று சொன்னால் ஆரம்பத்திலிருந்தே 2 அறைகளும், ஒரு சமையலறையும் கீழ்பகுதியிலும், மாடிப்பகுதியிலும் ஒன்றுபோல் கட்டப்பட்டது. பின்னர் எல்ஐசியில் கடன் வாங்கி கீழ்பகுதியிலும், மாடிப்பகுதியிலும் ஒரு அறையும், அட்டாச்டு பாத்ரூமும் கட்டப்பட்டது. அவ்வாறு மாடிப்பகுதி கட்டுவதற்கு பிரதிவாதி அவரது நகைளை அடமானம் வைத்து பணம் கொடுத்தார் என்று சொன்னால் பொய். வீடு கட்டும்போது நான் சென்னையில் இருந்தேன். மேல்மாடி கட்டும்போது பிரதிவாதி என் அப்பாவின் சம்மதத்துடன் தன் நகைகளை அடமானம் வைத்து பணம் கொடுத்து கட்டினார்என்றால் சரியல்ல. பிரதிவாதி அப்போது தூத்துக்குடியில் இருந்தார். பிரதிவாதி அப்போது தூத்துக்குடியில் இருந்தார் என்று சொல்வது பொய் என்றால்சரியல்ல. என் அப்பா பிரதிவாதியிடம் மேல்மாடியை நீயே கட்டி, நீயே குடியிருந்து, நீயே சொந்தமாக வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. அதற்கு நானும், மற்ற வாரிசுகளும் சம்மதம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. தற்போது என் அப்பா திடீரென இறந்து போனதால் தற்சமயம் பிரதிவாதிக்கு மாடிப்பகுதியில் உள்ள உரிமைகளைப்பறிப்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. தபசில் சொத்திலுள்ள மாடிப்பகுதி பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதில் எனக்கோ, மற்றவர்களுக்கோ எந்தவித உரிமையோ, கூட்டு பாத்தியதையோ கிடையாது என்றால் சரியல்ல. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது. ஆனால் தாத்தா வழியில் வருமானமுண்டு. தாத்தா வழியில் வருமானம் உள்ளதாக பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. என் தாத்தா வழியில் என்ன வகையில் வருமானம் என்றால் என் தாத்தா என் தாயாருக்கு 30, 40 பவுன் நகை கொடுத்துள்ளார். வேறு வருமானம் எதுவும் கிடையாது. 30, 40 பவுன் நகை கொடுத்ததாக இந்த

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்ள ன்றால் சரியல்ல. அதனால்தான் இந்த விவரத்தை பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் பெயரில் மாத்யூ தெருவில் 6 செண்ட் இடம் உள்ளது. அது என் தகப்பனார் தாயார் பெயரில் வாங்கிக் கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. அது என் தாயாரின் தனிப்பட்ட சொத்து. என் அம்மா அவரது பெயரில் வாங்கினார். அவ்வாறு தனிப்பட்ட முறையில் என் தாயார் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த சொத்தினை என் தகப்பனார், தாயார், பிள்ளைகள் நன்மைக்காக வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டு தன்வந்திரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. Depression-க்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மனநிலை சரியில்லாத காரணத்திற்காக தான் சிகிச்சை பெற்றார் என்றும், இப்போதும் அவருக்கு முழு மனநிலை சரியில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயாரை என் சாட்சியாக விசாரிப்பேனா என்றால் அவரை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. என் தாயாரை விசாரித்தால் உண்மைகள் தெரியவரும் என்றும், சொத்து வாங்கப்பட்டது தெரியவரும் என்றும், அதனால்தான் விசாரிக்க வேண்டாம் என்று சொல்கிறேன்என்றால் சரியல்ல. என் சகோதரர் சிவகுமார் இந்த வீட்டின் கீழ்பகுதியில் குடிவந்து 6 மாதங்கள் இருக்குமா என்றால் என் அண்ணிக்கு பணி மாறுதல் கிடைத்து வந்தவுடன் இங்கு குடிவந்தார்கள். எவ்வளவு நாள் இருக்கும் என்று குறிப்பிட்டு தெரியாது. சிவகுமார் பணி மாறுதல் பெறுவதற்கு முன்பு சென்னையில் குடியிருந்தார். என் சகோதரி மாலதி சென்னையில் குடியிருக்கிறார் என்றால் திருமணத்திற்கு பின்பு சென்னையில் குடியிருக்கிறார். அவர் திருமணம் எப்போது நடந்தது என்று ஞாபகமில்லை. திருமணம் நடந்து 4 வருடங்கள் இருக்கும். என் அப்பா 31.12.2014அன்று கேரள மாநிலத்தில் இறந்து போனார். மாரடைப்பினால் இறந்து போனார். பத்தனம்திட்டா மாவட்டம், கோணி தாலுகா மருத்துவமனையில் வைத்து இறந்துபோனார். அவர் இறக்கும்போது நாங்கள் சென்னையில் இருந்ததால் பிரதிவாதியின் கணவர் கேரளா சென்று என் அப்பாவின் உடலை கொண்டு வந்தார் என்றால் அவர் மட்டுமல்ல, பக்கத்து

வீட்டுகாரரும் சென்று கொண்டு வந்தார்கள். அவரது உடலை கொண்டுவருவதற்கு பிரதிவாதியின் கணவர்தான் செலவழித்தார் என்றால் நாங்கள்தான் பணம் கொடுத்தோம். ஆம்புலன்சிற்கு நாங்கள்தான் பணம் கொடுத்தோம். பணம் கொடுத்ததற்கு ரசீது கிடையாது. பிரதிவாதியின் கணவர்தான் செலவழித்தார் என்றும், அதற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவழித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தகப்பனார் இறப்பிற்கு 3ஆம் நபர் போல்வந்து உடனே சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் தாயார் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்தார் என்றால் சரியல்ல. என் அண்ணன் பராமரிப்பில் இருந்தார். என் தகப்பனர்ா இறந்த 7வது நாளிலேயே என் தாயாரை பிரதிவாதியின் பராமரிப்பில் விட்டுவிட்டு சென்னை சென்று விட்டேன் என்றால் சரியல்ல. அன்றிலிருந்து என் தாயாரை பிரதிவாதிதான் கவனித்துவருகிறார் என்றால் சரியல்ல. என்தகப்பனார் இறந்த பின்பு தூத்துக்குடியில் இருந்த பிரதிவாதியிடம் பேசி அவருடன் தாயாரை தாவா வீட்டின் மாடி பகுதியில் குடிவைத்தோம். தூத்துக்குடியில் இருந்ததாக சொல்வது பொய் என்றும், அவர் மாடிப்பகுதியில் குடியிருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பிஎஸ்என்எல்-ல் வேலை பார்த்தார். அவர் பணியிலிருக்கும் போதே இறந்து போனார். என் தகப்பனாருக்கு சேர வேண்டிய பணத்தினை பிரதிவாதியின் கணவர்தான் முயற்சி செய்து வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா நாமினி காட்டியிருந்தால் நான் சென்னையிலிருந்து வந்து பணத்தை வாங்கினேன். சுமார் ரூபாய் 6 இலட்சத்திற்கு மேல் வந்தது. சரியாக எவ்வளவு வந்தது என்று ஞாபகமில்லை. பிரதிவாதியின் கணவர் முயற்சி செய்து பணம் செலவழித்து என் தாயாருக்கு ரூபாய் பதினோரு இலட்சம் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரர் சிவகுமாரும் மோசடியாக ஆவணம் தயார் செய்து பணம் வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. என் தகப்பனாரது பணத்தில் பிரதிவாதிக்கு பங்கு எதுவும் கொடுக்கவில்லை. என் சகோதரர் கீழ்வீட்டில் குடிவந்த பின்னர் பிரதிவாதியை மேல்மாடியிலிருந்து காலி செய்ய வேண்டும் என்பதற்காக பிரச்சனை செய்ய ஆரம்பித்தார் என்றால் சரியல்ல. தாவா வீட்டில் போர்டிகோ உள்ளது. அதற்கு

மேல் மாடிப்பகுதியில் ஒரு அறை உள்ளது என்றால் சரியல்ல. அந்த பகுதியில் ஒரு அறை உள்ளது என்றும், 08.04.2016அன்று என் சகோதரர் சிவகுமார் இந்தி பேசும் வடமாநில ஆளை அழைத்துவந்து மாடிபகுதியில் அத்துமீறி நுழைந்து அந்த அறையில் சாமான்களை வைத்து அறையை பூட்டிவிட்டு வந்துவிட்டார் என்றும் சொன்னால்சரியல்ல. அதுசம்பந்தமாக பிரதிவாதி போலிசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அவர் கொடுத்தள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் போலிசார் என் சகோதரரை பிரதிவாதி குடியிருப்பதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினர் என்றால் எனக்குத்தெரியாது. அந்த புகாருக்கு பின்னர் என் தாயாரிடம் மோசடியாக நன்கொடை பத்திரம் வாங்கி அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் நன்கொடைப் பத்திரம் எழுதிக் கொடுத்தபோது நான் உடன் இல்லை. அந்த பத்திரத்தில் என் சகோதரர் சிவகுமார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் தெரியாது. இப்போது ஞாபகமில்லை என்று சொல்கிறார். அந்த பத்திரம் மோசடியாக பிரதிவாதியின் பங்கை மோசடி செய்வதற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல. என்னுடைய தூண்டுதலின் பேரில் 26.06.2018-ல் என் சகோதரர் மறுபடியும் பிரதிவாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்தார் என்றால் சரியல்ல. சன்னலை உடைத்து கொலை மிரட்டல் செய்தார் என்றால் சரியல்ல. அதன்காரணமாக மீண்டும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.75/2018 என்ற வழக்கு நீதித்துறைநடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. அவர் மீது குற்ற வழக்குஉள்ளது என்றும், அந்த வழக்கில் முன்ஜாமீன் பெற்றுவிட்டு இன்றுவரை ஜாமீன்தார் ஆஜர் செய்யாமல் இருந்துவருகிறார் என்றால் அந்த வழக்கு உண்மையில்லை என்று டிஸ்மிஸ் ஆனதாக சொன்னார். பிரதிவாதி இந்த வழக்கு பற்றி சொல்லியிருந்தும், அது டிஸ்மிஸ் ஆனதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கீழ்வீட்டிலுள்ள பிரதிவாதியின் பங்கை மோசடி செய்வதற்காக 04.07.2018-ல் விடுதலைப் பத்திரம் வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விடுதலைப்பத்திரம் வாங்கியுள்ளேன். அது மோசடி பத்திரம் என்றும், அவ்வாறு எழுதி வாங்குவதற்கும், எழுதிக்

கொடுப்பதற்கும் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் கீழே உள்ள பகுதியில் ஐந்தில் ஒரு பங்குள்ளது என்றும், மாடிப்பகுதி அவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என் தாயாரையும், சகோதரி, சகோதரரையும் சேர்க்காததால் வழக்கு அவசியமான தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேத்யூ தெருவில் உள்ள சொத்தையும், என் தகப்பனார் இறந்ததற்காக கிடைநத பணத்தையும் சேர்க்காததால் பகுதி பாகம் என்ற காரணத்திற்காக வழக்கு நிலைநிறுத்ததக்கதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சொந்த சொத்தாக அனுபவித்து வருவதால் எங்களுக்கு மத்தியகால வரும்படி கிடைக்கக்கூடியது எதிர்கால வருமானம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஐந்தில் நான்கு பங்கு எனக்கு உள்ளதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மதிப்பு நாற்பது இலட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. இருபத்தைந்து இலட்சம் இருக்கும். மேத்யூ தெருவில் உள்ள சொத்து எவ்வளவு மதிப்பு இருக்கும் என்று தெரியாது. அந்த சொத்து 45 இலட்ச ரூபாய்க்கு மேல் மதிப்பிருக்கும் என்றும், அவற்றை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பிற்கு அவர் அனுப்பிய பதில் அறிவிப்பை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.